பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 07 2026 FRIDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தமது ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக் கொண்டு நியூஸிலாந்து செல்கிறார்.
- நாட்டின் 50 சதவீத மின் தேவை தூய்மை எரிசக்தி திட்டங்களின் மூலம் பெறப்பட்டுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- மனித - வனவிலங்கு மோதல் சம்பவங்கள் தடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.
- குழந்தைகள் மேம்பாடு மற்றும் கல்வி குறித்து யுனிசெஃப் அமைப்பின் பிரதிநிதி திருமதி. Cynthia McCaffrey-யுடன் நித்தி ஆயோக் உறுப்பினர் Dr Joram Aniya ஆலோசனை நடத்தினார்.
- அமெரிக்க சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - Prathana Thompare இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

பாதுகாப்பு, வர்த்தகம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இந்தியாவும், ஆஸ்திரேயாவும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது ஆஸ்திரேலிய பயணத்தின் கடைசி நாளான இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. Angus Taylor-ஐ சந்தித்து ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தோ - பசிபிக் மண்டலத்தில் பாதுகாப்பு, முதலீடு, இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் ஆகியவை குறித்தும் அவரிடம் விவாதித்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

இருநாடுகளும் வளர்ச்சிக்கான பல புதிய வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு நட்புறவு மிகுந்த மதிப்புமிக்கது என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு. *Anthony Albanese*-சுடன் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தையும் பிரதமர் பார்வையிட்டார்.

விளையாட்டுத் துறையில் இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளது.

கிரிக்கெட் விளையாட்டில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆஸ்திரேலிய பிரதமருடன் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

விளையாட்டு கட்டமைப்பு, தடகள மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பது குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

இந்தியா முன்நின்று நடத்தும் ஒலிம்பிக் போட்டி குறித்தும், ஐ.பி.எல்., *BBL* ஒத்துழைப்பு குறித்தும் இருதலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இன்று தமது ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக் கொண்டு, இரண்டு நாள் பயணமாக நியூஸிலாந்து செல்லும் பிரதமர், அந்நாட்டின் புத்தாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார்.

நியூஸிலாந்து நாட்டின் தலைவர்களை சந்தித்துப் பேசும் திரு. நரேந்திர மோடி, நட்புறவை மேம்படுத்துவது குறித்தும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

குழந்தைகள் மேம்பாடு, பள்ளிக்கல்வி மற்றும் மனிதவள மேம்பாடு குறித்து யுனிசெஃப் அமைப்பின் பிரதிநிதி திருமதி. Cynthia McCaffrey-யுடன் நித்தி ஆயோக் உறுப்பினர் Dr Joram Aniya புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக, நித்தி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையில், குழந்தைகளுக்கு அடிப்படை எழுத்தறிவை ஊக்குவிப்பது, எண்ணியல் கல்வியை வளர்ப்பது, ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி, இணையதள தாக்கத்திலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு விழிப்புணர்வை

ஏற்படுத்ததல் உள்ளிட்டவை குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னோடி மாவட்டங்கள் மற்றும் தாலுகா-க்களில் குழந்தைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

குழந்தைகள் மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்தல், மக்கள் பங்களிப்பு மற்றும் மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் குழந்தைகளின் நலன் மற்றும் கல்வியை ஊக்குவிப்பது உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் இந்த சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டதாக நித்தி ஆயோக்கின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் 50 சதவீத மின் தேவை தூய்மை எரிசக்தி திட்டங்களின் மூலம் பெறப்பட்டுள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் கடந்த மாதம் 6ஆம் தேதி நிலவரப்படி, 50 புள்ளி இரண்டு சதவீத மின்விநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களிலிருந்து பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில், தூய்மை எரிசக்திக்கான கட்டமைப்பு வலுப்பெற்று வருவதாக அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சீரிய வழிகாட்டுதல்களால், மின் உற்பத்தியில் நிலையான - நீடித்த வளர்ச்சியை நாடு பெற்றுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மனித - வனவிலங்கு மோதல் சம்பவங்களை தடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் இன்று மனித - வனவிலங்கு மோதல்களை தடுப்பது குறித்த தேசிய கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசிய அவர், புலிகள் காப்பகம் அமைந்துள்ள பகுதிகளில் மோதலை தவிர்ப்பதற்கான கொள்கைகளை வகுக்குமாறு வலியுறுத்தினார்,

சிறுத்தை மற்றும் யானைகளால் கால்நடைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பை களைவதற்கான திட்டங்களை வரையறை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வனப்பரப்பை ஒட்டியுள்ள நகர்ப்புறம் மற்றும் கிராமப் பகுதிகளில், மக்களிடையே வன விலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, பாதுகாப்பான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மனித - வனவிலங்கு மோதலை தடுக்க நீண்டகால செயல்திட்டத்தை வகுக்க வேண்டும் என்றும் திரு. புபேந்தர் யாதவ் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மனித – வனவிலங்கு மோதல் குறித்த இணையதளம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த கையேட்டை அமைச்சர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், இந்தியாவில் மட்டுமின்றி ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் மனித - விலங்கு மோதல் பிரச்சினையாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் இதற்கான தீர்வுகளை கண்டறிந்து, அவற்றை மற்ற நாடுகளுக்கு தெரிவிக்கும் வகையில், சர்வதேச கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வனத்துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் பொதுசிவில் சட்டத்தை கொண்டு வருவதற்கான வரைவு சட்டத்தை தயாரிக்க, உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ரஞ்சனா தேசாய் தலைமையில் 7 உறுப்பினர்கள் கொண்ட குழுவை, முதலமைச்சர் திரு. Devendra Fadnavis அறிவித்துள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், அரசியல் சட்டம் மற்றும் மாநிலத்தின் அடிப்படை கொள்கைகளின் அடிப்படையில், பொதுசிவில் சட்டத்தை இந்தக் குழு தயாரிக்கும் என்றும் கூறினார்.

ஆறு மாதத்தில் இதுகுறித்த அறிக்கையை மாநில அரசிடம் குழுவினர் சமர்ப்பிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பொதுசிவில் சட்ட மசோதா தயாரிக்கப்பட்டு, குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்றும் திரு. Devendra Fadnavis கூறினார்.

>>>>>><<<<<<

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் உயர்கல்வி பெறுவதற்கு உதவும் வகையில் கொண்டுவரப்பட்ட பிரதமரின் வித்யாலெஷ்மி கல்விக் கடன் திட்டம், தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் தங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று கடனுதவி பெற்ற மாணவி மற்றும் பெற்றோர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவி-பெற்றோர் 37 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஈரான் நாட்டின் மறைந்த உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் உடல், Imam Reza வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

அவரது மூத்த மகனான Seyyed Mostafa Khamenei இறுதிச் சடங்குகளை செய்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

>>>>>><<<<<<

தமிழகம், கர்நாடகா, கேரளம், நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்காலில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்ராகண்ட் மாநிலத்தில் கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை ஹிமாச்சலப் பிரதேசத்தில் தீவிரமடைந்து வருவதன் காரணமாக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

மண்டி, சிம்லா, சோலன், கன்கரா, சிர்மாவூர் ஆகிய மாவட்டங்களில் மிக கனமழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - Prathana Thompara இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-0, 5-7 10-3 என்ற செட்கணக்கில் கனடாவின் Cadence Brace - அமெரிக்காவின் Catrina Scott இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாகேத் மைனேனி - இங்கிலாந்தின் Liam Broady இணை மற்றும் இந்தியாவின் Nicky Kaliyanda – தாய்லாந்தின் Truchya Isaro இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

>>>>>><<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

Lords-ல் இப்போட்டி பிற்பகல் மணி 3-30க்கு நடைபெறுகிறது.

>>>>>><<<<<<